# மெட்ரோ ரயில் சேவையில் மாற்றம்

**சென்னை, ஏப். 20–**

கொரோனா ஊரடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால், மெட்ரோ ரயில் போக்குவரத்தில், இன்று முதல், நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி, மெட்ரோ ரயில், திங்கள் முதல், சனி வரை, அதிகாலை, 5:30 மணியில் இருந்து, இரவு, 9:00 மணி வரை மட்டுமே இயக்கப்படும்.

பயணியர் போக்குவரத்து அதிகம் உள்ள, காலை, மாலை வேளைகளில், ஐந்து நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில், 10 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படும்.

சென்னை எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம், விமான நிலைய மெட்ரோ நிலையம், பரங்கிமலை மற்றும், விம்கோ நகர்நிலையங்களில் இருந்து, கடைசி ரயில்கள், இரவு, 8:55 மணியில் இருந்து, 9:05 மணிக்கு புறப்பட்டு, சென்றடைய வேண்டிய கடைசி நிலையங்களுக்கு இரவு, 9:50 மணிக்குள் சென்றடையும்.